**செய்தி வெளியீடு எண்: 684** **நாள்: 17.11.12**

# செய்தி வெளியீடு

மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவை ஆகும். நம்முடைய அன்புக்கும், ஆதரவுக்கும் உரிய விலங்குகளை பராமரிப்பது நமது கடமையாகும். எனவே மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, விலங்கினங்களின் நலன்களுக்காகவும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது

அந்தவகையில், யானைகளை பராமரிப்பதும், பாதுகாப்பதும் நமது இன்றியமையாத கடமையாகும். எனவே திருக்கோயில்களில் உள்ள யானைகளை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல் அவற்றிற்கு போதுமான ஓய்வு அளிக்கப்படவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் பராமரிக்கப்பட்டு வரும் யானைகளுக்கு புத்துணர்வு அளிக்கும் வகையில் யானைகளுக்கு ஒரு சிறப்பு நல வாழ்வு முகாம் நடத்தப்படவேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது முந்தைய ஆட்சிக் காலத்தில் உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் 2003 ஆம் ஆண்டு முதல் யானை சிறப்பு நல வாழ்வு முகாம் துவக்கப்பட்டு, ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வந்தது. இந்த முகாமில் யானைகளுக்கு புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்பட்டு, அவற்றின் உடல் நலமும், மனநலமும் பேணப்பட்டு வந்தது.

இந்த யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2006–2007ஆம் ஆண்டு முதல் 2010–2011 ஆம் ஆண்டு வரை நடத்தப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றபின், யானைக்களுக்கான சிறப்பு நலவாழ்வு முகாமினை மீண்டும் நடத்த ஆணையிட்டார்கள். இதன்படி, 2011–2012ஆம் ஆண்டில் திருக்கோயில்களுக்கும் திருமடங்களுக்கும் சொந்தமான 37 யானைகளுக்கு 14.12.2011 முதல் 30.1.2012 வரை 48 நாட்களுக்கு முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் (தெப்பக்காடு) மீண்டும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டது.

அதேபோன்று, இந்த ஆண்டும், 26.11.2012 முதல் 48 நாட்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்திரகாளியம்மன் திருக்கோயிலுக்கு அருகில் பவானி ஆற்றுப்படுகையில் உள்ள பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான சுமார் 4 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் அமைந்துள்ள நீர்வளம் மிக்க ஒரு அமைதியான சூழ்நிலையில் 33 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 35 யானைகள், 5 திருமடங்களுக்குச் சொந்தமான 10 யானைகள், ஆக மொத்தம் 45 யானைகளுக்கு அவைகளின் மனநலமும் உடல்நலமும் பேணுவதற்கான சிறப்பு நலவாழ்வு முகாமை நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.

நாள்: 17.11.2012